செ.வெ.எண்: 33 நாள்: 13.11.2021

**பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் மேற்பார்வை அலுவலர்/அரசு சிறப்பு செயலாளர் (சிறுகுறு மற்றும் நடுத்த தொழில் நிறுவனங்கள் துறை) திருமதி மஹேஸ்வரி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் மேற்பார்வை அலுவலர்/அரசு சிறப்பு செயலாளர் (சிறுகுறு மற்றும் நடுத்த தொழில் நிறுவனங்கள் துறை)திருமதி மஹேஸ்வரி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் இன்று (13.11.2021) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் மேற்பார்வை அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது:**

பெரம்பலூர் மாவட்டத்தில் 01.01.2022 அன்று 18 வயது பூர்த்தி அடையவுள்ள அனைவரது புள்ளி விவரங்களையும் சேகரித்து அவர்கள் அனைவரையும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் தொடர்பாக அனைத்து பகுதிகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சுருக்க முறை திருத்த நடவடிக்கையின்போது பெறப்படும் படிவங்களை உடனுக்குடன் சரிபார்த்து பதிவேற்றம் செய்திட வேண்டும். துணை வாக்காளர் பட்டியல்களை உடனுக்குடன் தயார் செய்திட வேண்டும். தேர்தல் ஆணையம் வகுத்துள்ள அனைத்து விதிமுறைகளையும், முறையாக பின்பற்றவேண்டும். வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு 100 சதவீதம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான அறிவுரைகளை வழங்கவேண்டும். சிறப்பு முகாம்களின்போது அரசின் கொரோனா தொற்று வழிகாட்டி நெறிமுறைகளை அனைவரும் பின்பற்றவேண்டும். அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் 100 சதவீதம் அனைவரையும் சேர்க்க முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் மேற்பார்வை அலுவலர்/அரசு சிறப்பு செயலாளர் (சிறுகுறு மற்றும் நடுத்த தொழில் நிறுவனங்கள் துறை) அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி நா. அங்கையர்க்கண்ணி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி நிறைமதி, பெரம்பலூர் நகராட்சி ஆணையர் திரு. ச. குமரிமன்னன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. தி. சுப்பையா, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு. சரவணன், தேர்தல் வட்டாட்சியர் திரு. சீனிவாசன் மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் உதவித் தேர்தல் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம்.